# அர்ச். சின்னப்பரும் விசுவாசமும்

- சங். K. அந்தோணி சுவாமி (தூத்துக்குடி மேற்றிராசனம்)

என்ன நேரிட்டாலும் எபிரேயர் விசுவாசத்தில் தளராதிருக்க வேண்டுமென்று சின்னப்பர் வற்புறுத்துகிறார்.

**“துர்மனசாட்சி நீங்க, தெளிக்கப்பட்ட இருதயங்களும்ää பரிசுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமும் உள்ளவர்களாய், பூரண விசுவாசத்தோடும் உண்மையான இருதயத்தோடும் அவரிடம் அண்டிப்போவோமாக" (10:22)**

விசுவாசம் என்றால் என்ன என்பது பற்றி பின்வருமாறு விளக்குகிறார்:

**“விசுவாசமானது நாம் நம்பிக் காத்திருக்க வேண்டியவைகளின் அடிநிலையும், காணப்படாதவைகளின் நிச்சயிப்புமாயிருக்கின்றது" (11:1)**

மோட்சப் பாக்கியம், சர்வேசுரனோடுள்ள ஐக்கியம்; இந்த ஐக்கியத்திற்குக் காரணமாயிருந்தவர் கிறீஸ்துநாதர்; அவருடைய பிறப்பு, பாடுகள், உத்தானம் இவையாவற்றையும் நேராக அறியவும், கண்டு அனுபவிக்கவும் கிறீஸ்தவ உள்ளம் ஏக்கம் கொண்டிருக்கிறது. இவைகளை அனுபவிப்போம் என்னும் நம்பிக்கையில் கிறீஸ்தவன் ஜீவிக்கிறான். இந்த நம்பிக்கைக்கு அஸ்திவாரம் விசுவாசம்.

பதினோராம் அதிகாரம் விசுவாசத்தைப் பற்றியே எழுதப்பட்டிருக்கிறது. பிதாப்பிதாக்களின் விசுவாசம் சர்வேசுரனுக்குப் பிரியமாயிருந்தது. நீதியின் அளவு கோல் விசுவாசம் என்கிறார் அர்ச். சின்னப்பர்.

விசுவாச ஒளியால் சத்தியத்தை அறிந்தபின், மனப்பூர்வமாய் விசவாசத்தைப் புறக்கணிக்கிறவர்களை கண்டிப்பாய் அவர் எச்சரிக்கிறார்.

**“சத்தியத்தை அறியும் அறிவை நாம் கைக் கொண்ட பின்பு, மனதாரப் பாவஞ் செய்வோமாகில், பாவப் பரிகாரமான வேறொரு பலி நமக்குக் கிடையாதே" (10:26)**

**“மோயீசனுடைய பிரமாணத்தை மீறுகிறவன் சற்றும் இரக்கம் அடையாமல், இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்குமூலத்தால் சாகிறான். அப்படியானால், தேவ சுதனைக் காலின் கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தப்படுத்தின உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தம் என்றெண்ணி, வரப்பிரசாத இஸ்பிரீத்துவுக்கு அவமானஞ் செய்கிறவன் எத்தனையோ அதிக ஆகோரமான ஆக்கினைகளுக்குப் பாத்திரவானாக இருப்பானென்று நினைக்கிறீர்கள்?" (10:28-29)**

விசுவாசத்தை நிசாரமாய்ப் புறக்கணிப்பது வேதத்தைப் புறக்கணிப்பதாகும். அது இஸ்பிரீத்துசாந்துவை விரோதிப்பதாகும்.

### விசுவாசத்தின் கதி - கர்த்தரில் இளைப்பாற்றி

விசுவாசத்தினால் நம்பிக்கை உண்டாகிறது. நம்பிக்கை கர்த்தரைக் காண்பதில் முடிவடைகிறது.

**“தேவ பிரஜைகளுக்கு இளைப்பாற்றியின் காலம் இனி வருகிறதாயிருக்கிறது.**

**ஏனெனில் அவருடைய இளைப்பாற்றிக்குள் பிரவேசித்தவன், சர்வேசுரன் தம்முடைய கிரியைகளை முடித்து இளைப்பாறினது போல தானும் தன் கிரியைகளை முடித்து இளைப்பாறுவான்." (4:9-10)**

பாவச் சுழலில் அகப்பட்டுத் திண்டாடும் கிறீஸ்தவன் சர்வேசுரனுடைய இளைப்பாற்றியினுள் நுழைவதற்குமுன் அதாவது சர்வேசுரனை அடைவதற்குமுன் கடக்க வேண்டிய படிகள் நான்கு:

1. பாவப் பரிகாரம்,

2 ஆத்தும சுத்திகரம்,

3. ஆத்தும பரிசுத்தம்,

4. ஆத்தும ஜீவிய பூரணம்.

பாவப் பரிகாரம் பிரதான குருவாகிய சேசு கிறீஸ்துவால் நிறைவேறினது:

**' அவர் இரக்கமுள்ளவரும் சர்வேசுரன் மட்டில் பிரமாணிக்கமுள்ள குருப்பிரசாதியுமாயிருந்து ஜனங்களுடைய பாவங்களைப் பரிகரிக்கும்படிக்கு" (2:17) 'தம்மைத் தமது சகோதரர்களுக்குச் சமமாக்கினார். அதே சுதனானவர் நம்மை பாவங்களிலிருந்து சுத்திகரித்தார்" (1:3)**

**'அந்த ஏக பலி ஒன்றினால் அர்ச்சிக்கப்பட்டவர்களை என்றென்றைக்கும் உத்தமராக்கினார்" (10:14)**

பழைய ஏற்பாடு எவரையும் உத்தமமாக்குதற்கு சக்தியற்றதாயிருந்தது. பிதாப் பிதாக்கள் இந்த மேலான கதியை அடைய ஆசைப்பட்டார்கள் அதை அவர்கள் கண்டடையவில்லை.

**'அந்தப் பிரமாணமானது யாதொன்றையும் உத்தமமாக்கவில்லை. ஆனால் நம்மைச் சர்வேசுரனிடத்தில் நெருங்கிப் போகச் செய்கிற மேலான நம்பிக்கைக்கு அது ஒரு வழியாயிருந்தது." (7:19)**

**'நாமில்லாமல் இவர்கள் சம்ப10ரணம் அடையாதபடிக்கு சர்வேசுரன் நமக்கு அதிக மேன்மையான ஒரு தயவைச் செய்ய சித்தமானார்." (11:40)**

கிறீஸ்துவில் நாம் உத்தமரானோம்@ பூரண ஜீவியத்தைக் கண்டோம்.

**'அவர் தேவ சுதனாயிருந்தும், தம்முடைய பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டு, சம்பூரணரான பின்பு தமக்குக் கீழ்ப்பட்டிருக்கிற யாவருக்கும் நித்திய ஈடேற்றத்தின் காரணமானார்"(5:8-9).**

கிறீஸ்துவில் நித்திய ஜீவியத்தின் சம்பூரணத்தைப் பெற்றபின்ää பிதாவின் இளைப்பாற்றியில் நுழைவது நிச்சயம்.